DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24 .11.2023

**முதல் விசாரணை**

நான் தானிக்கோட்டகத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்து போன தியாகராஜனை தெரியாது. தற்போது எங்கள் ஊர் ஊராட்சி தலைவர் முருகாணந்தம். முருகாணந்தத்திற்கு முன் வேதையன் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை கரியாப்பட்டினம் ஆய்வாளர் ரோட்டில் வரும்போது பெயர் கேட்டார். செல்வன் மகன் வீரா எனக்கு வேண்டியவர் கிடையாது.

(சாட்சிளை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

23.02.2007 ம் தேதி கரியாப்பட்டினம் ஆய்வாளர் உங்களுக்கு மற்றும் வீராவிற்கு செல்போனில் அழைத்து காவல் நிலையம் வர சொன்னார்கள் என்றும்

16.02.2007 கொலை செய்யப்பட்ட தியாகராஜன் என்பவர் வழக்கு சம்மந்தமாக எதிரிகள் ராஜசிம்மன்,ஆனந்த், கண்ணன், செல்வம்,பாபு,சுந்தர் ஆகியோர்களை கஷ்டடி எடுத்திருப்பதாகவும் அவர்கள் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும் அதில் சாட்சியாக இருக்கும் படி கேட்டு கொண்டார்கள் என்றும் அதன் அடிப்படையில் முதலில் ராஜசிம்மன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்,அதில் நான் கையொப்பம் இட்டோம் என்றும், அதன் அடிப்படையில் திருத்துறைபூண்டி மீனாட்சி வாய்கால் பாலத்தில் கீழ் கொண்டு வைத்திருந்த அரிவாள்,கத்தி, கம்பி ஆகியவற்றை எடுத்து ஒப்படைத்தார் என்றும் அந்த கைப்பற்றுதல் மகஜரிலும் கையெழுத்து செய்தேம் என்றும் அதன் பின்னிட்டு கண்ணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலும் கையெழுத்து செய்தோம் என்றும் அதன் பின்னிட்டு ஆனந்த் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து செய்தேம் என்றும் அதன் பின்னிட்டு சுந்தர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பின்னிட்டு மறுநாள் காலை 9.00 மணிக்கு செல்வம் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் அதன் பின்னிட்டு பாபு அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலும் கையெழுத்து செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் அடிப்படையில் அரிவாள்,கத்தி,கம்பி ஆகியவை கைப்பற்றுதல் செய்யப்பட்டது என்று கூறிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதற்குகாக கையெழுத்து செய்யவில்லை என்றும் எதிரிகளை தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** - இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமமூர்த்தி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24 .11.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது தானிக்கோட்டகம் தெற்கு காட்டில் வசிக்கிறேன். எதிரிகளை தெரியாது. இறந்து போன தியாகராஜனை தெரியாது. ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அ.சா.ஆ.1 உள்ள கையெழுத்து என்னுடையது தான். அய்யப்பன் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.2 என்னுடையது தான். டாடா இண்டிகா 7074 ம் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். TN 51 B 8890 கைபற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4. அம்பாசிட்டர் கார் MSQ 6224 கைபற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆகும். சக்திதாசன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6 ஆகும். 43.50 செ.மீ நீளம் உள்ள அரிவாள் கைபற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7 ஆகும்.

(சாட்சிளை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

20.02.2007 ம் தேதி கரியாப்பட்டினம் ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் அய்யப்பன் மற்றும் சக்திதாசன் ஆகியோர் சென்ற வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது இருவரும் ஆளுக்கு ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார்கள் என்றும் அதில் தாங்கள் செய்த தவறை கூறினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் அதன் அடிப்படையில் அனைத்து சான்று பொருட்களும் அவற்றில் சாட்சியாக கையெழுத்து இட்டுவிட்டு எதிரிகள் கேட்டு கொண்தற்காக அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது என்றும் மற்றது தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்து போட்டதாக சொல்வது எழுதாத வெள்ளை காகிதம் என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் மட்டும் போட்டேன்.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
NAGAPATTINAM.

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவேலன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24 .11.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆயக்கரன்புலத்தில் வசித்து வருகிறேன். சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை. எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்த தியாகராஜன் எப்படி இறந்தார் என்று தெரியாது.

(சாட்சிளை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை ஆய்வாளர் விசாரணை செய்யும் போது ராமமூர்த்தி என்னுடைய நண்பர் என்றும் 20.02.2007 ம் தேதி நானும் ராமமூர்த்தியும் மணக்காடு செல்லும் போது செங்காதலை பாலம் வழியாக வந்து கொண்டிருந்த போது காலை 6.00 மணியளவில் ஆய்வாளர் டாடா சுமோ TN 51 B 8890 என்ற வாகனத்தை சந்தேகப்பட்டு மறைத்தபோது தென்னம்புலம் முருகையன் மகன் அய்யப்பன் மற்றும் சக்தி தாசனை

விசாரணை செய்தார்கள் என்றும் அப்போது அய்யப்பன் என்பவர் எந்த வித வர்புறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் நானும் ராமமூர்த்தியும் சாட்சி கையெழுத்து இட்டோம் என்றும், செல்லியுள்ளேன் என்றும், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது இல்லை. என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அய்யப்பன் மற்றும் சக்தி தாசன் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார்கள் என்றும் அப்போது அய்யப்பன் தான் தியாகராஜனை வெட்டிய அரிவாலை மறைத்து வைத்திருக்கும் இடமான தென்னம்புலம் கலை நகரில் உள்ள தன் வீட்டிற்கு சென்று மறைத்து வைத்திருக்கும் அரிவாலை அடியாளம் காட்டி எடுத்து கொடுப்பதாக கூறி அது போல் ஆய்வாளரிடம் எடுத்து ஒப்படைத்தார் என்றும், அதற்கு பின்னிட்டு காலை 9.30 மணியளவில் வெள்ளப்பள்ளம் போய் அங்கு விட்டுவிட்டு சென்ற நரசிம்மன் கார் எம்.எஸ்.கீயு. 6224 என்ற காரை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார் என்றும் அதிலும் நீங்கள் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்திர்கள் என்றும், பிறகு காலை 11.00 மணிக்கு டாடா இண்டிகா TN 01 T 7074 என்ற வண்டியையும் அடியாளம் காட்டினார் என்றும், அதுவும் மகஜரில் கைப்பற்றப்பட்டது என்றும், அதிலும் சாட்சியாக கையெழுத்து இட்டுவிட்டு எதிரிகள் கேட்டு கொண்தற்கு இணங்க ஒப்புதல் வாக்கு மூலத்திலும் மகஜரிலும் சாட்சி கையெழுத்து இடவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** - இல்லை